Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 98/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 06, Page.No. 16/26

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. வினோத் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. சேகர் | தொழில் | பேராசிரியர் |
| கிராமம் | காவேரிப்பட்டு | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 36 |
| **எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.** | | | 1-6 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 15th day of June 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.06 திரு. வினோத் முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். வாணியம்பாடி வாணி பாலிடெக்கினிக் கல்லூரியில் துறை முதல்வராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 கருணாநிதி என் மாமா ஆவார். இவ்வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என் உறவினர்கள். அவர்கள் இன்று ஆஜர் ஆகியிருந்தால் அவர்களை என்னால் அடையாளம் காட்ட இயலும், மாலா என்பவர் ஊராட்சி மற்ற தலைவராக உள்ளார். அவர்களை பற்றிய அவதூறு செய்திகளை வாட்ஸ் ஆப் மூலம் கலையரசன் தொடர்ந்து அனுப்பி வந்தார். இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். அவ்வாறு புகார் அளித்த விவரம் தெரியவந்ததால் எதிரிகள் அவ்வப்போது எங்களிடம் பிரச்சனை செய்து வந்தார்கள். கடந்த 20.01.2023 அன்று இரவு 8.45 மணியளவில் நானும் என் நண்பர் அறிவுநிதியும் ஆனந்தன் என்பவரின் கடைக்கு அருகே நின்று பேசிக்கொண்டிருந்த போது அங்கு என் மாமா கருணாநிதி எங்களை கடந்து சென்றார். அப்போது ஆனந்தன் என்பவர் என்

மாமா கருணாநிதி என்பவரை நிறுத்தி கோத்தா தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டி சண்டைக்கு இழுத்தார். அப்போது இவ்வழக்கு எதிரிகள் ஆறுபேரும் அங்கு இருந்தார்கள். 3ம் எதிரி சரவணனன் தன் கையில் இருந்த கத்தியை சாலையில் கீரி என் மாமாவை பார்த்து உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். அப்போது 1ம் எதிரி அசிங்கமாக திட்டி இரும்பு கம்பியால் அ.சா.1 னின் வலது காலில் முட்டிக்கு மேல் ஓங்கி அடித்தார். அதை பார்த்து விலக்குவதற்கு நான் சென்றேன். அப்போது இரண்டாம் எதிரி ஒரு கொம்பால் என் வலது காலில் தாக்கி என்னை நெட்டி தள்ளி அ.சா.1 னின் முதுகின் மீது கையால் ஓங்கி பத்து முறை தாக்கினார். மேலும் அ.சா.1 யை காலால் எட்டி உதைத்தார். வலி தாங்க முடியாமல் கத்தவே ஊர் மக்கள் வந்து அவரை மீட்டனர். பின்பு காயம்பட்ட எங்களை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர். அ.சா.1 யை உள்நோயாளியாக சேர்த்தார்கள். எனக்கு வெளிகாயாங்கள் ஏதும் இல்லாததால் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றேன். சம்பவத்தின் போது 1, 2 எதிரிகள் கையில் கொம்பை வைத்துக்கொண்டு என் குடும்பத்தையே காலி செய்துவிடுவதாக மிரட்டினார்கள். இந்த சம்பவத்திற்கு பிறகும் இதே போல் 2–3 சம்பவங்கள் நடந்து புகார் அளிக்கப்பட்டுள்ளன. போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

**1.** எங்களுக்கும் ஆனந்தன் தரப்பினருக்கும் கட்சி ரீதியாக பிரச்சனை இருந்ததது என்றால் சரிதான். இருதரப்பினரும் அவர்அவர் கட்சிக்காக எதிறும் புதிறுமாக பணியாற்றுவோம் என்றால் சரிதான். மாலா என்பவர் மீது வாட்ஸ் ஆப்பில் பொய்செய்தி பரப்பியதாக அழைத்த புகாரின் பேரில் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ஆனால் காவல் நிலையத்தில் புகார் அளித்த விவரம் எனக்கு தெரியும். வழக்கு பதிவு செய்தார்களா என்று நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். அவ்வாறு ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் வாட்ஸ்ஆப்பில் மாலா என்பவர் மீது பொய்செய்தி அனுப்பியதாக புகார் ஏதும் அனுப்ப வில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. ஆனந்தன் கடைக்கு அருகே பல வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அந்த இடம் பொதுவாக மக்கள் நடமாட்டம் அதிகம்

இருக்கும் இடம் என்றால் சரிதான். சம்பவத்தை பொதுமக்கள் எத்தனை நபர்கள் பார்த்தார்கள என்றால் சம்பவத்தின் போது யாரும் பார்க்க வில்லை. ஆனால் சம்பவம் முடிந்து சுமார் 15 நபர்கள் வந்தார்கள். சம்பவம் நடக்க தொடங்கும் போது ஊர்பொதுமக்கள் யாரும் இல்லை. சம்பவம் நடந்து கொண்டிருந்த போது மக்கள் சுமார் 10 நபர்கள் வந்து வேடிக்கை பார்க்க தொடங்கினர். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் இல்லை. சம்பவத்தை பற்றி அக்கம்பக்கம் உள்ளவர்களை போலீசார் விசாரித்தாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாட்சிகள் 1 முதல் 4 பட்டியல் சாட்சிகள் என் உறவினர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கு எதிரிகள் தேர்தலின் போது எங்களுக்கு எதிராக பணியாற்றினார்கள் என்றாலும், நாங்கள் ஆளும் கட்சியை சேர்ந்தவர் என்பதால் அந்த செல்வாக்கை பயன்படுத்தி நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதாரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

//**உண்மை நகல்**//

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

**நீதித்துறை நடுவர் எண். 01**
**திருப்பத்தூர்.**

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO.98/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 05, Page.No. 16/26

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சேகர் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. கோபால் | தொழில் | மளிகை கடை வியபாரம் |
| கிராமம் | காவேரிப்பட்டு | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 61 |
| **எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.** | | | 1-6 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 15th day of June 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.5 திரு. சேகர் முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் மளிகை கடை வைத்து வியபாரம் செய்து வருகிறேன். கடந்த 22.01.2023 அன்று காலை 07.45 மணியளவில் நானும் அறிவு என்பவரும் எங்கள் ஊரில் இருந்த போது ஒரு அடிதடி வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட வந்திருப்பதாகவும் அதற்கு என்னையும் அறிவு என்பவரையும் சாட்சிகளாக இருக்கும் படிகேட்டுகொண்டு எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகரசில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தனர். மேலும் சம்பவ இடத்தில் இருந்து இரும்பு ராடு மற்றும் மரக்கொம்பு ஒன்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றி மகசர் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ம் கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

**1.** மாலா என்பவர் என் உறவினர் ஆவார். நாங்கள் தி.மு.க வை சார்ந்தவர்கள். இவ்வழக்கு எதிரிகள் அ.தி.மு.க வை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். என் மனைவி பெயரில் அவதுறு செய்தி பரப்பியதால் தான் பிரச்சனை என்றால் சரிதான். புகார்தாரர் என் உறவினர் என்பதால் அவருக்கு ஆதராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றாலும் சான்று பொருட்களை கைப்பற்றபடவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் சம்பவட இடத்தை பார்வையிட்ட போது எங்களை தவிர வேறு பொதுமக்கள் இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகே வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அங்குஉள்ளவர்களை போலீசார் விசாரிக்க வில்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

//**உண்மை நகல்**//

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

**நீதித்துறை நடுவர் எண். 01**
**திருப்பத்தூர்.**